தவக்காலம் 2ஆம் ஞாயிறு திருப்பலி
A ஆண்டு - 1 மார்ச் 2026

தவக்காலத்தின் 2ஆம் ஞாயிறு A ஆண்டு மார்ச் 1 2026
முதல் வாசகம் : தொ.நூ 12: 1-4
2ஆம் வாசகம்: 2 திமொ 1:8-10
நற்செய்தி வாசகம்: மத் 17:1-9

முன்னுரை:

நாம் ஒரு திரைப்படத்தின் முன்னோட்டத்திற்கு செல்வதாக மனதில் நினைத்துக் கொள்வோம். அதில் திலைப்பட கதாநாயகன் தனது மேலான உச்சத்தில் இருப்பதை அந்த முன்னோட்டம் சிறிதளவு போட்டுக் காட்டுகிறது. பின்னணி இசையால் அரங்கம் அதிர்கிறது. திரையிலிருந்து வரும் வண்ண ஒளிக்கதிர்கள் கண்களைக் கூசச் செய்கின்றன. இவை அனைத்தும் முடிந்தப் பின் கருப்பு வண்ணத் திரை மட்டுமே காட்சியளிக்கிளது அதில் ”விரைவில் வெளிவிருக்கிறது” என்ற எழுத்துகள் தெரிகின்றன. ஒரு நண்பர் அதைப் பார்த்தப்பின் எனனிடம் ”வெளிவரவிருக்கும் இந்தப் படத்திற்காகக் காத்திருப்பது ஒரு சிரமமமான காரியம் அல்ல. ஆனால் இப்போது வீடு திரும்பியவுடன் எனக்காகக் காத்திருக்கும் வீட்டு வேலைகளை செய்ய வேண்டும் என்பதே எனக்கு மலைப்பாக உள்ளது. ஆயினும் அந்த முனனோட்டதைப் பார்த்தப்பின் என் நண்பனிடம் ஒரு திருப்பம் காணப்பட்டது. அது என்னவென்றால் வரவிருக்கும் அந்தத் திரைப்படத்தின் கதை எதை நோக்கி நகர்கிறது என்பதை அவர் தெரிந்துக கொண்டார்.

இன்றைய நற்செய்தியும் இந்த திரைப்பட முன்னோட்டம் போன்றதே. இது இயேசுவின் தோற்ற மாற்றம் குறித்த செய்தி. இயேசுவின் தோற்ற மாற்றம் இறைமாட்சியின் முன்சுவையாக இயேசுவின் சீடர்களுக்க அருளப்பட்டது. இது அவர்களின் காலத்தில் அவர்கள் எதிர்கொள்ள விருக்கும் இருளின் சூழலை எதிர்க்கொள்ள அவர்களுக்கு வலிமையை அளித்தது. அவர்கள் இத்தனை நாள்கள் தங்களுக்குப் பரிச்சயமான கடலையும், மீன்பிடி வலைகளையும் விட்:விட்டு இப்போது உயரமான மாயை ஏறுகிறார்கள். அங்கு அவர்கள் இயேசுவை முற்றிலும் புதியதான ஒரு ஒளியின் மாட்சீயினூடே காண்கிறார்கள். அவரது முகம் கதிரவனைப் போல ஒளிர்ந்தது. அவரது ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின. அவருடன் மோசேயும் எலியாவும் காட்சியளித்தனர். பின்னர் மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்திலிருந்து ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்கு செவி கொடுங்கள்” என்ற குரல் ஒன்று ஒலித்தது.

இன்றை நிகழ்வில் நமது நம்பிக்கை நமக்கு எப்போதும் பரிச்சயமானவற்றை ஒதுக்கி வைத்து விட்டு நமது மலையை ஏறி அதன் உச்சியை அடைவோம். அங்கு நம் வாழவில இறையொளி யைக் காண்போம். நமக்கான அருளின் நேரம் மிகக் குறுகியதாக இருக்கலாம் ஆனால் அவை நமது கருத்துகளை மாற்றுகின்றன, நமது உற்சாகத்தை நிலைநிறுத்துகிறது, நாம் மேற்கொள்ளவிருக்கும் பயணத்திற்கு அது நம்மை தயாரிக்கிறது. இந்த நற்கருதைத் திருப்பலி யைத் துவங்கவிருக்கும் நாம் கடவுளின் மாட்சியின் முன்சுவையை நம் வாழ்வில் அனுபவிக்க நம் இதயங்களைத் திறந்து வைப்போம்.

பாவமன்னிப்பு வழிபாடு :

இயேசுவே உம்மோடு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தில் உம் சீடர்கள் வலிமைப் பெறறவர்களாக விளங்கிட அவர்களுக்கு மலையின் மேல் உமது மட்சியை வெளிப்படுத்தினீரே -- எங்கள் வாழ்வின் சுழற்காற்றின் மத்தியில் உமது ஒளியைக் காணத் தவறிய கணங்களுக்காக எங்களை மன்னித்தரும் -- ஆண்டவரே இரக்கமாயிரும்.

உமது பயணங்கள கடினானதும், சவாலானதுமாக இருந்தாலும், உமக்கு செவிமடுக்க எங்கை அழைக்கின்றீர் உமது வாக்கை கேட்க மறுத்தும் உமது அழைப்பை ஏற்காது எங்கள் சுகமதன வாழ்வில் மட்டுமே நிலைத்திருந்திருக்கிறோம் எங்களை மன்னித்தருளும் - கிறிஸ்துவே இரக்கமாயிரும்

எங்களை உமது இரக்கத்தின் கரங்களால் தொட்டுத் தூக்கி எங்கள் அச்சங்களை நீங்கி எங்களை விழிப்படைய செய்கிறீர் ஆயனும் உம்மைப் பின்பற்றி வர இயலாது எங்களைஎங்கள் பயங்களும். சந்தேகங்களும் பற்றிப் பிடித்து பின்னுக்க இழுக்கச் செய்கின்றன எங்களை மன்னியும் -- ஆண்டவரே இரக்கமாயிரும்.

பாவ மன்னிப்புக்காள இறைவேண்டல்:
நமது அன்பின் இறைவன் நம்மீது இரக்கம் வைப்பாராக
நம் பாவங்களை மன்னித்து கிறிஸ்துவுடனான நமதுப் பயணம் எத்தனை செங்குத்தான தாகவும், நிச்சயமற்றதாகவும் இருந்தாலும் அதைத் துணிவுடன் மேற்கொள்ள வலிமையருள் வாராக ஆமென்.

மறையுரை - மலையை எறுவதற்கான ஒரு முன்னோட்டம்:

ஒரு நண்பர் எனள்ளிடம் தனக்குப் படங்களைப் பார்ப்பதைவிட அதன் முன்னோட்டங்களையே பார்க்கப் பிடிக்கும் என்றுக் கூறினார். அதற்கு அவர் கூறிய காரணங்கள் -- அந்த முப்பது நிமிட முன்னோட்டப் படங்கள் அந்தப் படத்தில் வரும் முக்கியமான காட்சிகளைக் கொண்டதாகவும், இசை மிகவும் அதிகமாகவும், படத்தின் கதாநாயகன் வெற்றியாளனாகவும் காட்டப்பட்டு திடீரென திரை மழுவதும் வெறுமையாகி அதில் விரைவில் வெளியீடு என்ற சொற்கள் காணப்படுவதையும் குறிப்பிட்டுப் பேசினார்.

அதன் பின்னர் அவர் "வெளிவரவிருக்கும் இந்தப் படத்திற்காகக் காத்திருப்பது ஒரு சிரமமமான காரியம் அல்ல. ஆனால் இப்போது வீடு திரும்பியவுடன் எனக்காகக் காத்திருக்கும் வீட்டு வேலைகளை செய்ய வேண்டும் என்பதே எனக்கு மலைப்பாக உள்ளது. ஆயினும் அந்த முன்னோட்டத்தைப் பார்த்தப்பின் என் நண்பனிடம் ஒரு திருப்பம் காணப்பட்டது. அது என்னவென்றால் வரவிருக்கும் அந்தத் திரைப்படத்தின் கதை எதை நோக்கி நகர்கிறது என்பதை அவர் தெரிந்துக் கொண்டார்".

இன்றைய நற்செய்தியும் இந்த திரைப்பட முன்னோட்டம் போன்றதே. இது இயேசுவின் தோற்ற மாற்றம் குறித்த செய்தி. இயேசுவின் தோற்ற மாற்றம் இறைமாட்சியின் முன்சுவையாக உள்ளது. அது எப்போது மிக அவசியமக இருந்ததோ அந்த சமயத்தில் அது வெளிப்பட்டது.

இயேசு தம் பாடுகள், தாம் நிராகரிக்கப்படுதல், தமது மரணம் குறித்து அவர் வெளிப்படையாக பேசத் துவங்கியிருந்தார். அதைக் கேட்ட அவரது திருததூதர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். பேதுரு ஒரு படி மேலே போய் "ஆண்டவரே இது உமக்கு வேண்டாம் இப்படி உமக்கு நடக்கவே கூடாது" என்றார். சீடர்கள் தேர்ந்துக் கொண்ட விருப்பப் பாதை அதுவல்ல. அவர்கள் விரும்பியது .வெற்றி, அவர்களைக் கண்டு மற்றவாகள் வியக்க வேண்டும், மிகவும் சௌகரியமாக வாழ்வு - அவர்களது விருப்பம் சிலுவைகள் அல்ல.

எனவே இயேசு அவர்களுக்கு எதையோ உணர்ந்த விரும்பினார். எனவே அவர்களே எதிர்ப்பாராத போது அவர்களில் மூவரை - பேதுரு, யாக்கோபு, யோவான் -- ஆகியோரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஒரு உயர்ந்த மலைக்குச் சென்றார்.

அவர் மலைக்கு அழைத்து சென்ற நிகழ்வே எதையோ அவர்களுக்கு (நமக்கும்) உணர்த்தியிருக்க வேண்டும். ஏனெனில் இதுவரை இயேசுவின் பணி கலிலேயக் கடற்கரையில் தான். அவர்கள் அனைவரும் மீன்பிடி தொழில் செய்பவர்கள். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் படகுகள், வலைகள், கடலில் ஏற்படும் சூரைக்காற்றுகள், உறக்கமிரல்லா இரவுகள் ஆகியவையே. மலைகள் என்றுமே அவர்களது வாழ்விடங்களாக இருந்ததில்லை. ஆனால் நமது இறைநம்பிக்கை சிலவற்றைத் தெளிவாகக் காண்பதற்காக நம்மை நமக்குப் பரிச்சயமில்லாத இடங்களை விட்டு விலகும்படி செய்யலாம்.

ஒருமுறை நான் ஒவ்வொரு வார இறுதி நாள்களில் மலை மீதேறுவதை வழக்கமாகக் கொண்ட ஒரு குழுவினரை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் உள்ளூரிலுள்ள மலைகளில் எல்லாம் ஏறி இறங்க0யப்பின் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களது அனுபவத்தைக் கேட்டறிந்த பின்பும் நான் அவர்களது உற்சாகத்தில் பங்குக்

கொள்ளவில்லை. நான் சமதரையில் நடைபயிலுவதையே விரும்பினேன். ஆனாலட மலை ஏறுவதில் உள்ள ஈர்ப்பைப் புரிந்துக் கொண்டேன். மலை உச்சியலிருந்துப் பார்க்கும் போதும் அனைத்தும் வேற விதமாகத் தெரியும். ஒரு சிறியக் குன்றும் கூட உங்களுது எண்ணங்களை மாற்றிப் போடலாம். அதனால் தாம் நம்மில் அநேகர் விமானப் பயணத்தின் போது அதிகமாக ஜன்னல் ஒர இருக்கையை விரும்புகிறோம். மேலிழருந்துப் பார்க்கும் போது நாம் தரையில் பார்க்கும் குழப்பங்கள் நிறைந்த நிலப்பரப்பும் பொருளுள்ளதாகக் காட்சியளிக்கிறது.

அதுதான் அன்று அந்த உயரமான மலைமீதும் நடந்தது --

பேதுருவும், யோவானும், யாக்கோபும் அவர்கள் இதுவரைத் தங்களோடு பயணித்த இயேசுவை ஒரு மாறபட்ட தோற்றத்தில் காண்கிறார்கள். இப்படிப்பட்ட இயேசுவை அவர்கள இதுவரைக் கண்டதே இல்லை. அவரது முகம் சூரியனைப் போல ஒளிர்கிறது. அவரது ஆடைகள் வெண்மையன நிறத்தில் ஒளிர்கின்றன. அப்போது அவர்கள் ”இந்த மனிதர் இதுவரை நம்மோடு பயணித்து களைப்படைந்தவர், பாவிகளோடு அமர்ந்து உணவருந்தியவர், நோயளிகளைகத் தம் கரங்களால் தொட்டவர் - அவர் முற்றிலும் இறைவனுக்குடையவர். இவர் இந்தப் பூவுலகில் நம்மோடு வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் இவர் வேற்றுலகை அதாவது இறைவனின் அரசை சார்ந்தவர். அவரது வேர்கள் அங்கே தான் ஊன்றப்பட்டுள்ளன “ என்பதை உணர்ந்துக் கொள்கின்றன்.

அவர்கள் மோசேயையும் எலியாவையும் காண்கிறார்கள். மோசே - இவர் கடவுளைக் கண்டுணர்ந்தது மலையின் மீதுதான். அதன் பின்னரே கடவுள் என்ன செய்கிறார் என்பதை அவர் அறிந்துக் கொள்கிறார். இறைவாக்கினர் எலியா - இவர் தன்னைத் தெடி வரும் கடவுளை சூரைக் காற்றின் நடுவிலோ பற்றி எரியும் தீப்பிழம்புகள் மத்தியிலோ அல்ல மாறாக மெல்லியதாக வீசும் தென்றலில் தன்னை அழைக்க வந்த இறைவனைக் கண்டுக் கொண்டார். திருச்சட்டங்களும், இறைவாக்குகளும் - நேற்றும் நாளையும் ஒன்றாக இயேசவில் சங்கமிக்கின்றதைக் காண்கின்றனர்.

அதன் பின்னர் மேகத்திலிருந்து ஒலிக்கிறது ஒரு குரல் ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்கு செவிகொடுங்கள்” என்று ஒலிக்கிறது.

சீடர்கள் பயத்தால் நடுங்கி தரையில் வீழ்கிறார்கள். விழுந்துக் கிடக்கிறார்கள். அதன் பின்னர் அந்த நறசெய்தியில் மனிதம் சார்ந்த , ஆறுதலளிக்கும் சில் நிகழ்வகளைக் காண்கிறோம். இயேசு சீடர்களுக்கு அருகில் வருகிறார். அவர்களை அவர் தொடுகிறாா. அவர்களிடம் ”எழுந்திருங்கள் அஞ்சாதீர்கள்” என்கிறார். இறைவன் நம்மை அச்சுறுத்துவதற்காக தமது மாட்சியை நமக்கு வெளிப்படுத்துவதில்லை மாறாக நம்மை வலுப்படுத்தவே.
எனவே தான் பேதுரு ”ஆண்டவரே நாம் இங்கேயே இருப்பது நல்லது” என்றுக் கூறுகிறார். நாம் ஒருவேளை இயேசு கதிரவனைப் போல ஒளிர்வதைக் காணாதிருக்கலாம். ஆனால் பல சமயங்களில் நம் வாழ்வில் பல நிகழ்வுகளின் வழியாக அத்தகைய ஒரு அனுபவம் கிட்டியிருக்கலாம். சில சமயங்களில் நமது தாறுமாறான வாழ்வு திடீரென சரியாக்கப்பட்டிருக் கலாம். அத்தகைய தருணங்கள் தந்திருக்கக் கூடிய அனுபவங்கள். சில நாட்களில் நடுநிசிகளில் நிகழ்ந்திருக்கக்கூடிய ஆழமான உரையாடல்களாக இருக்கலாம். நமது பாதையில் குறுககிட்ட அருமையான இசையும் நாதமுமாகவும் இருக்கலாம். புதிதாகப் பிறநதக் குழந்தையைக் கையிலேந்திய உன்னத அனுபவமாக இருக்கலாம். அமைதியாக அமர்ந்திருந்து இயற்கையை இரசித்த ஒரு கடற்கரையோர. கதிரவனின் மறைவைக் கண்டுக்களித்ததாகவும் இருக்கலாம்.

ஒரு முறை ஒரு இயேசு சபை குருவானவர் என்னுடன் தன் அனுபவத்தைப பகிர்ந்துக் கொண்டார். அவர் ஒரு ஏழ்மையில் உழலும் கிராமத்தில் பணி செய்துக் கொண்டிருந்தார். ஒருநாள் முரட்டுத் தோற்றம் கொண்ட ஒரு மனிதர் அவரைத் தேடி வந்துத் தன் குடிசைக்கு அழைத்தார். அந்த குரு முதலில் தயங்கினாலும் பின்னர் அவனது அழைப்பை ஏற்று அங்குச் சென்றார். அவர் தன் வீட்டில் அமைதியாக கதிரவன் மறையும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். குருவும் அவருடன் அமைதியாக அமர்ந்திருந்தார். பின்னர் அந்த மனிதர் குருவானவரை நோக்கி ”உங்களுக்குத் தருவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. எனவே நான் உங்களை அழைத்து இந்த அருமையானக் காட்சியையாவது காணச் செய்ய வேண்டும் என எண்ணி இதைக் காணவே உஙகளை அழைத்தேன்” என்றார்.

அந்த குருவுக்குள் அங்கே ஒரு உண்மையான தோற்ற மாறறம் நிகழ்ந்தது. அவர் அந்த நிகழ்வை ஒரு தூய்மையானக் கொடையாகவும், தூய்மையான அருள் பொழிவாகவும் கண்டார்.

பேதுரு உணர்ச்சி மேலிட அந்த மலையுச்சியில் கூடாரம் அமைத்துக் கொள்ளலாமா என்றுக் கேட்கிறார். அது மனித இயல்பில் ஏற்படும் எதார்த்தமான எண்ணம். அவர் அந்த நிகழ்வை அங்கேயே நிலைநிறுத்த விரும்புகிறார். அது தங்களை விட்டுக் கைநெகழ்ந்து விடக் கூடாது என்று எண்ணுகிறார். நாமும் இப்படியே செய்கிறோம். சில சமயங்களில் எதையோ கண்டு அதை உணர்ந்து செயல்படாமல் அந்த கிகழ்வை நாம் இப்போதெல்லாம் படம் பிடிக்கவே நினைக்கிறோம். அந்த மும்முரத்தில் அந்த நிகழ்வின் மாண்பை மறந்துவிடுகிறோம். ஆனால் இந்நிகழ்வு எதையோ செய்வதற்காக அல்ல மாறாக அந்த அனுபவத்திலிருந்து நாம் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளவே என்பதை நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

மேகத்தினூடே வந்த குரலொலி பேதுருவை "செவிமடுக்க வேண்டும்" என்ற நிலைக்கு திசை திருப்புகிறது. சில அருட்கொடைகளை நாம் நமது முயற்சியில் ஒழுங்காக அமைக்கவோ, சேமித்து வைத்துக் கொள்ளவோ, கட்டுப்படுத்தவோ இயலாது. மாறாக அவற்றை ருசித்து இரசித்துப் பார்க்கத்தான் இயலும். நாம் ஒரு அருமையான கொண்டாட்டத்தின் நடுவில் இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த நேரத்தில் நாம் சுத்தம் செய்து கழுவி வைக்க வேண்டிய பாத்திரங்களைக் குறித்து அங்கலாய்த்துக் கொண்டிருந்தால் நாம் கலந்தக் கொண்டிருக்கும் கொண்டாட்டத்தின் முழுமையை உணர்ந்து அனுபவிக்க முடியாது. எனவே நாம் ஏதும் செய்ய இயலாத நிலைகள் நாம் உணர்ந்து இரசிக்க, அனுபவிக்கவே மட்டும் என்ற சூழல்கள் நிகழும்போது நாம் எதுவும் வருந்தி செய்ய வேண்டியதில்லை. அந்த இடத்தில் அந்த சந்தர்ப்பத்தில் நாம் அமைதியாக, நன்றி உணர்வுடன், கவனத்தை அதிலேயே செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

பேதுரு அந்த நிகழ்வைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க எண்ணியதிலிருந்து விடுபட்டபோது வேறொரு அழகான சம்பவம் அங்கே நிகழ்கிறது. இயேசு அவர்களை அண்டி வந்து அவர்களைத் தொடுகிறார்.

நமக்கும் அருள்கொடைகள் வழங்கப்படும்போது அவற்றைக் குறித்து அலட்டிக்கொள்ளாமல் அமைதியாக அமர்ந்திருப்போமானால் நம்மையும் நம் ஆண்டவர் தொடுவார்.

மலை உச்சி அவர்களது பயணத்தின் இறுதியான இடம் அல்ல. அவர்கள் கீழே இறங்கி வந்தாக வேண்டும் -- மீண்டும் பல்வேறு வாக்குவாதங்களில் ஈடுபட, தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட, புரிந்துக் கொள்ள, நோய்நொடிகள், பயங்கள் மத்தியில் நடமாட வேண்டும். அவர்கள் இதுவரை அனுபவித்திராக மோசமான சூரைக்காற்றுகளையும், சூறாவளிகளையம் அனுபவித்தாக வேண்டும். இவை அனைத்திற்கும் அப்பால் அவர்களுக்கு எருசலேமும், கெத்சமெனியும், கொல்கொதாவும் காத்திருக்கின்றன

இயேசவின் தோற்ற மாற்றம் அவருக்கு நேரிடவிருக்கும் துன்பங்களை அவரிடமிருந்து, அவரது லாழ்வின் பாதையிலிருந்து எடுத்து விடவில்லை. மாறாக அதை அது மிண்டும் சரியாக வடிவமைத்தது. சிலவை அவரது இலக்கல்ல. அது அவர் அடையலிருக்கும் மாட்சிகானப் பாதை. எனவே தான் இந்த நிகழ்வு இங்கே வருகிறது. இருள் சூழும்போது ஒளி தரப்படுகிறது. அந்த ஒளி நாம் துன்பப்படக் கூடாது நமக்குத் துன்பம் வரக்கூடாது என்பதற்காகத் தரப்படவில்லை மாறாக துன்பத்தைத் தாங்குவதற்காகத் தரப்படுகிறது.

இயேசுவின் தோற்ற மாற்ற நிகழ்வை பேதுரு பல ஆண்டுகளுக்குப்பின் அதாவது கிறிஸ்துவர் களுக்கு எதிரான வேதகலகங்கள் மூண்டபோது நினைவு கூருகிறார். அவர் கூறுகிறார் "நாங்கள் அவரது மாண்பை நேரில் கண்டவர்கள்" (2 பேதுரு 1:16-18). நமது துணிவு தோல்வியடையும்போது நமது நினைவாற்றல் நம்மைத் தாங்கிப் பிடிக்கிறது. அன்றுக் கண்ட முன்னோட்டம், முன்சுவை வலிமையூட்டுகிறது.

நமது வாழ்வே மலைக்கும், மடுவுக்கும் நடுவே, புயலுக்கும் அமைதிக்கும் இடையில் தான் ஊசலாடிகடகொண்டிருக்கிறது. நம்மைப் புண்படுத்திய நிகழ்வுகள் நம் நினைவில் நீண்டக் காலம் நீடித்து நிற்கின்றன. ஆனால் இன்றைய நற்செய்தி நம் வாழ்வில் அருளப்படும் ஒளியைக் குறித்து நினைத்துப் பார்க்க நம்மை அழைக்கிறது. அச்சமயத்தில் நாம் இறைவனின் கரங்களால் துஜக்கி வரப்படுபவர்களாக, ஆறுதலும் வலிமையும் பெற்றவர்களாக உணருகிறோம்.

நம் கண் முன்னே இங்கேயே நடப்பதைப் பார்ப்பவர்களாக நம்மை அந்த நிகழ்வுகள் மாற்று கின்றன. நாம் பல சமயங்களில் வேறு இடங்களில் இருப்பதை, வேறு விதமான பணிகள் செய்வதை, வேறு விதமான மனிதர்களாக இருப்பதை, வேற விதமான வாழ்வியலைக் கொண்ட வர்களாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். சில வேளைகளில் மாற்றங்கள் அவசியம் தான். இறைவனே சில சமயங்களில் ஆபிரகாமை அழைத்ததைப் போன்று அனைத்தையும் விட்டு விட்டு அவரது அழைப்பை ஏற்க வேண்டும் என விரும்புகிறார். ஆனால் நாம் எப்போதும் ஏற்கனவே எங்கே இருக்கிறோம் என்பதைக் குறித்து ஆழமான நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் நம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு அந்நியர் / பிற மனிதரையும் கடவுளால் ”இவர் எனக்கு அன்பார்ந்தவர்” என்று அழைக்கப்பட்டவராகக் காண முற்படவேண்டும்.

நற்செய்தியில் நாம் பார்க்கும் போது, தோற்ற மாற்றத்தின் இறுதியில் இயேசு தம் சீமரை நடந்த நிகழ்வுக் குறித்து அமைதி காக்கச் சொல்கிறார். நம் வாழ்விலும் சில நிகழ்வுகள் வெறம் பறைசாற்றல்களுக்கானவை அல்ல அவை வாழ்ந்நது அனுபவிக்க வேண்டியவைகளாக உள்ளன. தோற்ற மாற்றத்தை வாழ்வாக்கி வாழும் மக்களுக்கு, அத்தகைய மனித உள்ளங்களுக்கு பேசுவதற்கு அதிகமான சொற்கள் தேவையில்லை.

எளது மறையுரையை இறுதியாக ஒரு கதையோடு முடிக்க விழைகிறேன் :
மலை ஏறுவோருக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவர் ஒருமுறை மலையேற்றத்தில் ஏறுவது அத்துணை அஞ்சத்தக்கது அல்ல மாறாக மலையிறக்கமே அதிக அச்சத்தைத் தரக்கூடியது என்றுக் கூறினார். மக்கள் வெகு விரைவில் தளர்வடைந்து விடுகிறார்கள். அவர்கள் கண்டுக் களித்தவற்றை எளிதில் மறந்து விடுகிறார்கள். நல்ல ஞானமுள்ள மலையேறுபவர் கீழே இறங்கும் போது மிகவும் மெதுவாகத் தான் கண்ட அருமையானக் காட்சிகளை மனத்திலிருத்தி அசைபோட்டவாறே அவற்றை சுமந்துக் கொண்டு இறங்குவார்.

இயேசுவின் தோற்ற மாற்றம் இத்தகைய ஒரு தாக்கத்தை நமக்கு அளிக்கிறது.

நாம் நமத இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகிறோம். பழைய பணிகளுககும் பொறுப்புகளக்கும் போராட்டங்களுக்கும் எவ்வித மாற்றமும் இன்றித் திரும்புகிறோம். நாம் மீண்டும் நம் வாழ்க்கைக்கு ஒரு நிச்சயத் தன்மையோடும், உறதியோடும், நமக்குள் எரிந்துக கொண்டிருக்கும் பிழ்ம்போடு, அதாவது நம்முள் ஒளிரும் ஒளி உண்மையானது, அன்பு மரணத்தைக் காட்டிலும் வலிமையானது, நமதுப பயணம் எத்தனை ஆழமானதாக இருப்பினும் நம்மை எங்கோ பத்திரமாக கொண்டு சேர்த்துவிடும் என்ற எணணங்களோடு திரும்புகிறோம்.

ஆனால் நாம் செல்லும் பாதை மிகவும் கடினமானதாக மேற்கொண்டு பயணிக்க இயலாததாகும் போதாவத நாம் அன்று அந்த மலையுச்சியில் ஒலித்த ஒலியான ”எழுந்திடுக அஞ்ச வேண்டாம்” என்பதை க் காதுக் கொடுத்துக் கேட்போமா?

இறுதி ஆசீர்:

உமது பாதைகளில. இறைவனின் ஒளி வீசுவதாக
உமது வாழ்வில் காத்திருக்கும் பல்வேறு சோதனைகளில் இறைவனின் ஆற்றல் உமக்கு வலிமையளிப்பதாக
இறைநம்பிக்கை நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் வழிநடத்துவதாக
அவரது அன்பு உம் இதயத்தை நிரப்புவதாக
கிறிஸ்துவின் மாட்சியின் நினைவலைகள் உமது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உம்மைத் தாங்கிப் பிடிப்பதாக
நீதியும் அன்பும் நிறைந்த இறைவ்ன் உம்மை ஆசீர்வதித்துக் காப்பாறாக --
தந்தை மகன் தூய ஆவியாரின் பெயராலே ஆமென்.

இறுதி வழியனுப்புதல்:

இறைவனை உங்கள் வாழ்வால் மாட்சிப்படுத்த அமைதியோடு சென்று வாருங்கள்
இறைவனுக்கு நன்றி

.இல்லத்திற்கு எடுத்துச் செல்லும் இனிதான நினைவுகள்:

இன்றைய நற்செய்தியின் நிகழ்வான இயேசுவின் தோற்ற மாற்றம் இறைவனின் மாட்சி ஒரு சிறு துளி நமக்க வெளிப்படுத்தப்பட்டாலும், அது நமது வாழ்நாள் முழுவதும் சந்திக்கவிருக்கும் அத்துணை சவால்களையம் தாங்கும் வரிமையை நமக்கு வழங்குகிறது. அத்தகையதொரு ஒளியும் அருளும் நிறைந்த கணங்களுக்காக இவ்வார இறுதி நாட்களில் எதிர்ப்பார்த்திருங்கள். அது கிட்டியவுடன் மலையிலிருந்து இறங்கி வரும்போது வலிமைப் பெற்றவர்களாக அச்சம் நீங்கியவர்களாக வருவீர்களாக

==
====**END OF SECOND WEEK OF LENT**